/பதிவஞ்சல் மூலம்/

திருவண்ணாமலை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
மூ.மு.எண்.2766/அ1/2018 நாள்.06.07.2018

–<<>>–

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவண்ணாமலை கல்வி மாவட்டம் , கீழ்பென்னாத்தூர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் – திருமதி.ஜா.கலா, இளநிலை உதவியாளர் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 17.11.2017 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு

பார்வை 1.அரசாணை எண்191/பொதுத் துறை நாள்01.2.1962
2.அரசு கடிதம் எண் 6483/73–3 பொது நாள் 30.07.1983
3.தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழு துணை செயலாளரின் கடிதம் எண்.5426/PSD –H2/2017 நாள்.23.09.2017
4. சென்னை – 6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.63975/அ4/இ1/2017 நாள்.27.10.2017
5.திருவண்ணாமலை மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.7052/அ1/2014 நாள்.13.11.2017
6.கீழ்பென்னாத்தூர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.350/அ1/2018 நாள்.26.04.2018

–<<>>–

திருவண்ணாமலை கல்வி மாவட்டம் , கீழ்பென்னாத்தூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திருமதி.ஜா.கலா என்பார் பார்வை(3)ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு துணை செயலர் அவர்களின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு (2015–2016 I Phase) பட்டியல் வரிசை எண்.183) பார்வை 4ல் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறை கடிதத்தின் படி நியமனம் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(5)ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் அளிக்கப்பட்டு 17.11.2017 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டிய கருத்துருவினை பார்வை (6) ல் காணும் கீழ்பென்னாத்தூர், மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அவர்களின் பரிந்துரையின் பேரில் இவ்வலுவலகம் பெறப்பட்டுள்ளது.

அதனை ஏற்று பார்வை(1) மற்றும் (2) ல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின்படியும் , பார்வை (6) ல் காணும் கீழ்பென்னாத்தூர், மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் 17.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

அன்னாருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. தகுதிகாண் பருவக்காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்ச்சி பெறுதல் வேண்டும். தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறப்பட வேண்டும். பணியில் சேர்ந்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெறவில்லை எனில் தொடர்ந்து பணியில் நீட்டிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பொருள் சார்ந்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு முதல்வர், கீழ்பென்னாத்தூர், மாவட்டக் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

1. பணிப்பதிவேடு 1 தொகுப்பு
2. எஸ்.எஸ்.எல்.சி மற்றும் +2 அசல் மதிப்பெண் பட்டியல்–2

மாவட்டக்கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

9/7/2018

பெறுநர்

திருமதி.ஜா.கலா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழ்பென்னாத்தூர்
(முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழ்பென்னாத்தூர் மூலம்)

நகல்

முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழ்பென்னாத்தூர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.